**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இரணியல்.**

**முன்னிலை: - திரு. மு. செந்தில்குமார், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

2023 - ம் ஆண்டு, மார்ச் திங்கள், 31 - ம் நாள், வெள்ளிக்கிழமை.

**வ.வி.எண்.4/2021**

**இன்**

**அசல் வழக்கு எண்.54/2021**

**1.** பீட்டர் தாமஸ்

**2.** இன்னாசி

**3.** அமல் ராஜ்

**4.** பெனடிக் ... மனுதாரர்கள் / வாதிகள்

/எதிர்/

**1.** அந்தோணி முத்து

**2.** ஜோசப் ராஜ் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது, 31.03.2022 அன்று இந்நீதிமன்றம் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர். திரு.V.வியாகுலமுத்து அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.உதயசிங் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையில், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை ஆகியவற்றை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## உத்தரவு

**1.** இம்மனுவானது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், உ.வி.ந.மு.ச கட்டளை 26 விதி 9 - ன் கீழ், வழக்கறிஞர் ஆணையரை நியமிக்கக் கோரி, இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

இந்த மனுவானது, வாதியால், கட்டளை 26 விதி 9 - ன் கீழ் தாவா சொத்துக்களைப் பொறுத்து, இந்த நீதிமன்றத்தால் வழக்கறிஞர் ஆணையரை நியமித்து, தாவா சொத்துக்களை இனம் கண்டு அளந்து, அது சம்பந்தமாக ஒரு அறிக்கையும், தாவா சொத்துக்களைப் பொறுத்து ஒரு வரைபடத்தையும் தாக்கல் செய்ய ஏதுவாக ஒரு உத்தரவும், மேலும், இந்த வழக்கின் பிரதிவாதிகள், தாவா 'B' பட்டிகை சொத்தை தங்களது பாதையோடு ஊறுவிளைவிப்பதாகவும், ஆதலால், இந்த வழக்கைப் பொறுத்து, தாங்கள் விளம்புகை பரிகாரம், சுவாதீன பரிகாரம் கேட்டுள்ளபடியால், வழக்கறிஞர் ஆணையரை நியமிப்பது அவசியம் என மனுவில் தெரிவித்துள்ளனர்.

**3. 2 - வது எதிர்மனுவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**

இந்த மனுவினை கடுமையாக ஆட்சேபிப்பதாகவும், இதில், வாதிகள் பிராதில் தெரிவித்துள்ள சங்கதிகள் பலவற்றில் தவறு காண்பதாகவும், பிழை காண்பதாகவும் தவறான சங்கதிகளை தெரிவித்து வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும், தோமையன் மற்றும் சவரிமுத்து ஆகியோரின் பிள்ளைகள் குறித்து தவறான தகவல்களை வாதி தெரிவித்திருப்பதாகவும், தோமையன் மற்றும் சவரிமுத்து வாரிசுகள் தங்களது பகுதியினைப் பொறுத்து, வருவாய் ஆவணங்களில் முறையாக பாகம் செய்யப்பட்டு, பெயர் மாற்றம் செய்து, அனுபவித்து வருகிறார்கள் என்றும், வாதிகள், இந்த மனுவினை தாக்கல் செய்து, அதன் மூலமாக சுவாதீனத்தை ஏற்படுத்த முயற்சிப்பதால், இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

**4.** கடந்த, 28.09.2021 - ம் தேதி 3 மற்றும் 4 மனுவாதிகள், 'B' பட்டிகை சொத்தில் சட்ட விரோதமாக நுழைந்து குடிநீர் குழாய் பதிக்க முயற்சித்தார்கள் என்றும், அது இந்த, 2 - ம் பிரதிவாதியின் மகனால் தடுக்கப்பட்டது என்றும், ஏற்கனவே, அசல் வழக்கு எண்.89/2001 வழக்கில் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை இரணியல் காவல் நிலையத்தில் காண்பித்து, வாதிகள் ஏற்படுத்திய சட்ட விரோத நிகழ்ச்சியை உட்படுத்துவதாக எதிர்மனுவாதி தெரிவித்துள்ளார். வழக்கறிஞர் ஆணையரை நியமிப்பதைக் குறித்து, பல்வேறு முன்தீர்ப்புகளில் காணப்படும் சட்ட நிலைப்பாட்டினை தனது எதிருரையில் தெரிவித்துள்ளார்.

**5. <u>இரு தரப்பும் கேட்கப்பட்டது</u> :**

இந்த நீதிமன்றம், வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராதினை பரிசீலித்த பொழுது, வாதியின் வழக்குப்படி, தோமையன் என்பவர் தான் தாவா சொத்துக்களின் உரிமையாளர் என்றும், மனுவேலுக்கு வழக்கு 'A' மற்றும் 'B' பட்டிகை சொத்து வாக்கரராக கிடைக்கப்பட்டது என்றும், அதன் அடிப்படையில், மேற்சொன்ன மனுவேல் தனது பிள்ளைகளுக்கு இஷ்தான பத்திரம் எழுதித் தந்ததாக தெரிவிக்கிறார். அந்த பத்திரத்தின் அடிப்படையில், மனுதாரரின் மகன்கள் கூட்டு அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருவதாகவும், இதில், குறிப்பாக, 'B' பட்டிகை சொத்து என்பது, பாதை சொத்து என தெரிவித்துள்ளனர். 'B' பட்டிகை சொத்து 2 சென்ட் பூமி விஸ்தீரணம் கொண்டது என்றும், இந்த பாதையை தவிர 'A' பட்டிகை சொத்தை சென்றடைய வேறு பாதை இல்லை என்றும், இந்த சூழ்நிலையில், 'B' பட்டிகை சொத்து வழியாக வின்சென்ட் என்பவர், மின்சார இணைப்பு பெற்றார் என்றும், இதற்கு வாதிகள் வாய்மொழியாக அவகாசம் தந்தார்கள் என தெரிவிக்கிறார். ஆனால், 'B' பட்டிகை சொத்தைப் பொறுத்து, பிரதிவாதிகள் போலியான ஒரு பத்திரத்தை வனைந்து விட்டதாகவும் வாதிகள் தமது பிராதில் தெரிவிக்கின்றனர். 'B' பட்டிகை சொத்தைப் பொறுத்து, பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும், சுவாதீனமும் இல்லையென தெரிவிக்கின்றனர். 'B' பட்டிகை சொத்தைப் பொறுத்து, வாதி நிலஅபகரிப்பு போலீசில் புகார் கொடுத்ததாகவும் தெரிவிக்கிறார்.

**6.** இனி, மனுவாதி தாக்கல் செய்துள்ள இந்த மனுவை எதிர்மனுவாதி கடுமையாக ஆட்சேபனை தெரிவித்துள்ளார். இந்த நீதிமன்றம், இந்த மனுவைப் பொறுத்து, வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க அவசியம் உள்ளதா? என பரிசீலித்த பொழுது, தாவாவை பொறுத்தமட்டில், 'B' பட்டிகை சொத்து 2 செண்ட் பூமியென மனுவாதி தெரிவித்துள்ளார். எதிர்மனுவாதி தங்களுக்கு பாத்தியப்பட்ட 14 செண்ட் பூமியில், மனுவாதிகள் அத்துமீறி ஆக்கிரமிக்க முயற்சித்தார்கள் என எதிர்வினா ஆற்றியுள்ளனர். இந்த சூழ்நிலையில், வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டுள்ள சொத்துக்கள் குறித்த முழு விபரமும், 'B' பட்டிகை சொத்து குறித்து இனம் காணுதலும் அவசியமாக இருக்கும் சூழ்நிலையில், இவற்றைப் பொறுத்து முழுமையாக இந்த நீதிமன்றத்திற்கு தெளிவுற ஒரு அறிக்கை பெறும்பட்சத்தில், 'B' பட்டிகை சொத்து பாதை பயன்பாட்டில் உள்ளதா? அல்லது, பிரதிவாதி தெரிவிப்பது போல, வாதி அத்துமீற முயற்சிக்கிறாரா? என இந்த நீதிமன்றம், இந்த மனுவினை அனுமதிக்கின்றது.

**7.** வழக்கறிஞர் ஆணையர் திரு.C.செல்வகுமார் வழக்கறிஞர் ஆணையராக நியமிக்கப்படுகிறார். தாவா 'A' மற்றும் 'B' பட்டிகை சொத்துக்களுக்கு நேரடியாக சென்று பார்வையிட்டு, வழக்காடிகளுக்கு அறிவிப்பு சார்பு செய்து, வட்ட கள அளவையரின் உதவியோடு, தாவா 'A' மற்றும் 'B' பட்டிகை சொத்துக்களை இனம் கண்டு, அளந்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது. தாவா சொத்துக்களை குறுந்தகடுகளுடன் கூடிய புகைப்படத்துடன் சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது. மேலும், பிரதிவாதி, தமக்கு பாத்தியப்பட்ட 14 செண்ட் பூமியில், இந்த நீதிமன்றம், பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமிகளைக் குறித்தும் அளந்து, அறிக்கை மற்றும் வரைபடம் சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணமாக ரூ.7,000/- நிர்ணயிக்கப்படுகிறது. அந்தத் தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2023 - ம் ஆண்டு மார்ச் திங்கள் 31 - ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

இரணியல்.

மா.உ.நீ, இரணியல்.

**வரைவு/ சீரான உத்தரவு**

வ.வி.எண்.4/2021

இன்

அசல் வழக்கு எண்.54/2021

தேதி 31.03.2023